

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திண்டிவனத்தில் நடைபெற்ற திமுக செயற்குழு ஆலோசனைக் கூட்டத்தில் மண்டல பொறுப்பாளரும், வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சருமான எம். ஆர். கே. பன்னீர்செல்வம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ, தொகுதி பார்வையாளர்கள்செஞ்சி கார்த்திகேயன், மயிலம் இள புகழேந்தி,திண்டிவனம் ஜாஃபர் அலி, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர் உள்ளனர்.



இராணிப்பேட்டை மாவட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் ரூ.5.45 கோடி மதிப்பீட்டில் 50 படுக்கையுடன் மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் பணிபுரியும் மகளிர்களுக்கான புதிய தோழி மகளிர் விடுதி கட்டுமானப் பணிக்கு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டியதையொட்டி கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி இராணிப்பேட்டை ரயில் நிலையம் அருகில் அடிக்கல் நாட்டும்பணியை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர். ஜெ.யு.சந்திரகலா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், நகரமன்ற தலைவர் சுஜாதா வினோத், நகர மன்ற உறுப்பினர்கள் இசட்.அப்துல்லா. வினோத்,குமார், மற்றும் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத் நகர துணை செயலாளர்கள் ஏர்டெல் குமார், வையாபுரி மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் இசட்அப்துல்லா, நகர இளைஞர் அணி அமைப்பாளர் அஜ்மல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ரூ.200 கோடியில் இராமநாதபுரம் – சிவகங்கை – மேலூர்

# நான்கு வழிச் சாலைப் பணிகள் நடப்பாண்டில் முடிவடையும்!

## சிவகங்கையில் - பணிகளை ஆய்வு செய்த அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!



சிவகங்கை, மே.22-

"ரூ.200 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம் - சிவகங்கை - மேலூர் இடையே நடைபெற்று வரும் நான்கு வழிச்சாலைப் பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவுறும்" என்று நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் சிவகங்கையில் பணிகளை ஆய்வு செய்த பின் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது :-

திராவிட மாடல் தமிழக முதல்வர் தலைமையில் அரசுத்துறைகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது .

இதில் நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப்பணி துறைசிறப்பாக பணிகளை மேற்கொண்டு வருகிறது. முதல்வர் கல்வி,மருத்துவம் ஆகிய துறைகளை இருகண்களாக பாவித்து வருகிறார். பொதுப்பணித்துறை சார்பில் மருத்துவ அலுவலக கட்டிடங்கள் கட்டப்பட்டுவருகிறது. இவைகள் நல்ல முறையில் சிறப்பானதாக தரமானதாக கட்டப்பட வேண்டும் என்று முதல்வர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் அரசு மன்னர்மருத்துவக் கல்லூரியில் கூடுதலாக ருபாய் 30.50 கோடியில் மகப்பேறு சீமாங்கட்டிடம் விபத்து மற்றும் சிகிச்சை பிரிவு கட்டிடம் புதிதாக கட்டப்பட்டு வருகின்றது. இங்கு கூடுதலான கட்டிடம் தேவை என்று கூட்டுறவு த்துறை அமைச்சர் கூறியதால் இந்த கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இந்த கட்டிடபணிகள் 90% சதம் முடிவடை ந்துள்ளது. ஜுன் மாதத்திற்குள் கட்டிட பணிகள் முடிவடைந்து மக்களின் பயன்பாட்டிற்கு வந்து சேரும்.

சிவகங்கை மாவட்டத்தில் 4 ஆண்டுகளில் 880 கிலோமீட்டர் தூரம் சாலைகள் ரூபாய் 1206 கோடி மதிப்பீட்டில் விரிவு படுத்தப்பட்டுள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் 49 தரைப்பாலங்கள் ருபாய் 48 கோடியில் உயர் மட்ட பாலங்களாக கட்டப்பட உள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் கிராமப்புறச் சாலைகள் 43 கிலோ மீட்டர் 27 கிரா மப்புற சாலைகள் ரூபாய் 42 கோடியில் பணிகள் நடைபெற உள்ளது. இதற்கு சாலைபோட குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தகுழு பரிந்துரை செய்யும் சாலைப்பணிகள் நடைபெற்று வருகின்றது.

சிவகங்கை மாவட்டத்தில் விபத்துக்கள் அதிகம் நடைபெற்று வந்தது. இது தொடர்பாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக நான் பங்கேற்ற மாவட்ட ஆட்சியர் தலைமையில் உள்ளாட்சி பிரதி நிதிகள் பொது நல அமைப்புகள் போன்ற அதிகாரிகள் பங்கேற்ற கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தில் விபத்துகளை குறைப்பதற்கான வழிகள் குறித்து ஆராயப்பட்டது. அதன் பெயரில் 47 இடங்கள் ஹாட்ஸ்பாட் என்று கண்டுபிடிக்கப்பட்டு ரூபாய் 99 கோடியில் பணிகள் முடிவடைந்துள்ளது. இதன் மூலம் விபத்துக்கள் குறையும் வாய்ப்பு உள்ளது.

**சிவகங்கையில் சுற்றுச்சாலை!**

முதல்வர் அவர்கள் நெடுஞ்சாலைத்துறை சார்பில் நான்கு வழி சாலைகளாக மாற்ற வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். சிவகங்கை மாவட்டத்தில் நகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்க சுற்று ச்சாலை அமைத்திடுமாறு கூட்டுறவுத்துறை அமைச்சர் கோரிக்கை வைத்தார். அதன்படி 110 கோடி மதிப்பிட்டில் மொத்தம் 10.80 கி.மீட்டர் தூரம் பணிகள்மேற்கொள்ளப்பட உள்ளது. முதற்கட்ட பணிகள் 7.60 கிலோமீட்டர் பணிகள் முடிவடைந்துள்ளது. மீதி 3.20 கி.மீ. தூரப் பணிகளில் மூன்று புள்ளி 20 லட்சத்தில் 2 ரயில்வே மேம் பாலங்கள், 14 சிறு பாலங்கள், 37 பெட்டி பாலங்கள் அமைய வேண்டும். இந்த பணிகளை ஆறு மாதத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கிராமப்புறத்தில் இருந்து நகரங்களை இணைக்கும் சாலைகள் தரமாக இருந்தால் தான் கிராமத்திலிருந்து அத்தியாவசிய பொருட்கள் எளிதாக கொண்டு வந்து சந்தைப்படுத்தமுடியும். இதனால் பொருளாதார வளர்ச்சி ஏற்படும். எனவே முதல்வர் அவர்கள் நான்கு வழிச்சாலை முதல்வர் மேம்பாடு திட்டம் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இது ராமநாதபுரத்தில் இருந்து சிவகங்கை மேலூர் வழியாக 4 வழி சாலை தரமாக போடப்பட்டுள்ளது. இதற்காக ரூபாய் 200 கோடி திட்டமதிப்பீடு இப்பணிகள் இந்த ஆண்டு முடிவடையும். ஒப்பந்தகாரர்கள் பணிகளை மேற்கொள்ளும் போது அதற்கென்று விதிமுறைகள் கூறப்பட்டுள்ளது. சாலைகள் தரமானதாக இருக்க வேண்டும். குறித்த காலத்தில் முடிக்க வேண்டும் என்று கூறப்ப ட்டுள்ளது. முதல்வர் அவர்கள் சாலைப் பணிகள் தரமானதாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

**தரமான சாலைகள்!**

நான் மாநிலத்தில் அவ்வப்பொழுது மாவட்டங்களுக்கு சென்று பணிகளை ஆய்வு செய்து வருகிறேன். இது பற்றிய ஏதாவது சிவகங்கை மாவட்டத்தில் புகார் தெரிவிக்க விரும்பினால் இதற்காக தெரிவித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். கான்ட்ராக்டர்கள் பணிகள் முடிவடைந்து இருந்தால் அவர்கள் கட்டி உள்ள டெபாசிட் தொகையில் அந்த பணிகள் முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதற்கென்று குவாலிட்டி கண்ட்ரோல் என்று சென்னையில் உள்ளது. அதற்கு புகார் அனுப்பினால் அவர்கள் இது குறித்து விசாரணை நடத்துவார்கள். சாலை தரமாக போட வேண்டும் என்று அரசு விரும்புகிறது. எனவே இதில் எந்த குறைபாடு களையும் அரசு ஏற்றுக் கொள்ளாது. இதில் எவ்வித காம்ப்ரமைஸ்கிடையாது. அவ்வாறு தரமற்ற முறையில் போடப்படும் சாலைகளுக்கு அபராதமும் விதிக்கப்படும்.

**சுங்கச்சாவடிகளை அகற்ற நடவடிக்கை!**

தமிழக முழுவதும் 48 சுங்கச்சாவடிகள் உள்ளது. இதில் பரனூர் மற்றும் பல்வேறு சுங்கச்சாவடிகள் 13 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இவற்றை அகற்ற வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு பலமுறை கடிதம் எழுதப்பட்டு விட்டது. ஆனால் அவர்கள் இன்னும் காலம் உள்ளது இதற்கென்று வருடங்கள் நிர்ணயி க்கப் பட வில்லை என்று பதில் கடிதம் அனுப்பி உள்ளார்கள். திருப்பத்தூர் தாலுகா செண்பகம் பேட்டை யில் உள்ள சுங்கச்சாவடியை அகற்றுமாறு மதுரை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதாக தெரிய வருகிறது. இது குறித்து அதிகாரிகள் உரிய விசாரணை நடத்தி முடிவெடுப்பார்கள்.

சிவகங்கை நகரில் ரயில்வே மேம்பாலத்திற்கு கீழ் தேசிய நெடுஞ்சாலை துறை மூலம் போடப்பட்டுள்ளசுரங்கபாலத்தில் தண்ணிர் தேங்குவதால் பொதுமக்கள் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்படுவதாக தெரிகிறது சாலையில் தண்ணீர் தேங்குவதாக அடிக்கடி புகார் கூறப்ப ட்டுள்ளது. இது குறித்து தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு கடிதம் எழுதப்படும் .உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சாலைகள் விரிவாக்கம் செய்யப்படும் பொழுது ஒரு மரம் வெட்டப்பட்டால் 10 மரம் வைக்கப்பட வேண்டும் என்பது விதி ஆகும் .எனவே அவ்வாறு மரங்கள் வைக்கப்படவில்லை என்றால் அவற்றை வைக்குமாறு ஒப்பந்தக்காரர்களுக்கு அறிவுறுத்தப்படும். கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழக முழுவதும் நெடுஞ்சாலைத்துறை துறை மற்றும் பொதுப்பணித்துறை சார்பில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்து வருகிறது.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

பேட்டியின் போது கூட்டுறவு துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன், மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித், திருமதி. தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம்.துரை ஆனந்த், திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கை மாறன், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் ஆர்.சந்திரசேகரன், கண்காணிப்பு பொறியாளர் ஆர்.கே. ரமேஷ், கோட்ட பொறியாளர் எஸ்.கே.சந்திரன் தலைமை பொறியாளர் சத்ய பிரகாஷ், ஒன்றிய செயலாளர்கள் எம்.ஜெயராமன், திருமலை, முத்துராமலிங்கம்

நிர்வாகிகள் அழகு சுந்தரம், சேவியர், மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ. அயூப்கான், மகளிரணி நிர்வாகிகள் மார்கரெட் கமலா, திலகவதி கண்ணன் சேவியர், ஒன்றிய துணை செயலாளர் எஸ்.முத்து குமார், தொ.மு.ச. முருகேசன், தடியப்பன், கோட்டாட்சியர் விஜய குமார், வட்டாட்சியர் சிவராமன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**கீழடி அருங்காட்சியகத்தை எ.வ.வேலு ஆய்வு செய்தார்!**

அதனைத் தொடர்ந்து அமைச்சர்கள் எ.வ..வேலு, கேஆர்.பெரியகருப்பன் ஆகியோர் சிவகங்கை தொண்டி சாலையில் போடப்பட்டு வரும் சுற்றுச்சாலைகள், பாலங்களையும், சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டு வரும் கட்டிடப் பணிகளை ஆய்வு செய்தார்கள். மருத்துவமனையில் கட்டிடத்திற்கான வர்ணம் பூசுதலை தரமாக நல்ல முறையில் மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். பின்னர் தீடிரென்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டார்கள். அதை தொடர்ந்து திருப்புவனம் ஒன்றியம் கீழடியில் உள்ள அருங்காட்சியத்திற்கு சென்று பார்வையிட்டார்.

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பங்கேற்பு!

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதி வாரியாக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் 2026 தேர்தல் பணி சம்மந்தமாக சட்டமன்றத் தொகுதி வாரியாக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மண்டல பொறுப்பாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார். கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெறவுள்ளது.

| தேதி | நேரம் | சட்டமன்றத் தொகுதி | நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| | காலை 9 மணி | செய்யூர் | சக்ரா திருமண மண்டபம். மேல்மருவத்தூர் |
| 28.05.2025 புதன்கிழமை | காலை 11 மணி | மதுராந்தகம் | எஸ்.எம்.ஜெ. மஹால். அச்சரப்பாக்கம். |
| | பிற்பகல் 2 மணி | உத்திரமேரூர் | தயா திருமண மண்டபம், மிலிட்டரி ரோடு, ஓரிக்கை, |
| | மாலை 4 மணி | காஞ்சிபுரம் | அருணா மஹால், காஞ்சிபுரம் |

மேற்கண்டவாறு நடைபெறும் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர , நகர. ஒன்றிப பகுதி பேரூர் செயலாளர்கள், சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள். மாநில மாவட்டக் கழக அணிகளின் நிர்வாகிகள். உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**க.சுந்தர் எம்.எல்.ஏ.,**
செயலாளர்
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் அர.சக்கரபாணி – பிரகாஷ் எம்.எல்.ஏ. சிறப்புரை!

கிருஷ்ணகிரி, மே.23-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் மற்றும் சட்டமன்றத் தேர்தல் 2026 வேப்பனபள்ளி, ஒசூர், தனி சட்டமன்ற தொகுதி வாரியான கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அவைத் தலைவர் யுவராஜ் தலைமையில் சூளகிரியில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் தமிழ்நாடு உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரும், சட்டமன்ற தேர்தல் மண்டல பொறுப்பாளருமாண அர.சக்கரபாணி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி, சட்டமன்ற தேர்தல் தொடர்பாக கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தை சேர்ந்த வேப்பனபள்ளி,

ஒசூர், தளி சட்டமன்ற தொகுதிகளை சேர்ந்த நிர்வாகிகள் வாக்காளர்களை வீடு, வீடாக சென்று நேரில் சந்தித்து கடந்த நான்காண்டுகளாக கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் செய்யப்பட்ட மக்கள் நலத் திட்டங்களான மகளிர் உரிமைத் தொகை, மகளிர் அரசு பேருந்தில் கட்டணம் இல்லா பேருந்து பயணம், கல்லூரி மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டம்,கல்லூரி மாணவர்களுக்கு தமிழ் புதல்வன் திட்டம், மக்களை தேடி மருத்துவம் உள்ளிட்ட மக்கள் நலத் திட்டங்களை எடுத்துக் கூறி தி.மு.க. ஆட்சியின் சாதனைகளை விளக்க வேண்டும் எனவும், நடைபெற உள்ள 2026 சட்டமன்றத் தேர்தலில் ஏழாவது முறையாக திமுக ஆட்சியை அமைக்க அனைவரும் அயராது பாடுபட வேண்டும். கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்பதற்கு நீங்கள் அனைவரும் அயராது உழைக்க வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும், ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் அரியப்பன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் வடிவேல், மாவட்ட துணை செயலாளர்கள் சின்னசாமி , புஷ்பா சர்வேஷ், பொருளாளர் சுகுமாரன், ஒசூர் மாநகர துணை மேயர் ஆனந்தைய்யா, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வீரா ரெட்டி, எல்லோரா மணி, கிரீஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெயராமன் , சீனிவாசன்,

முனிராஜ், அப்துல் கலாம், தனலட்சுமி, அருணா பூசன், ஒன்றிய செயலாளர்கள் பாக்கியராஜ், நாகேஷ், ரகுநாத், கருணாகரன், ஸ்ரீனிவாசலு ரெட்டி, திவாகர், கஜேந்திரமூர்த்தி, சின்ராஜ், தணிகாசலம், ஸ்ரீதர், பேரூர் கழக செயலாளர்கள் சீனிவாசன், தஸ்தகீர் , ஒசூர் மாநகர அவைத்தலைவர் செந்தில்குமார், கோபாலகிருஷ்ணன் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் , தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. மாணவர் அணி

# திண்டுக்கல் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் **திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்** - திண்டுக்கல் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்

### திண்டுக்கல் மாநகரம்

அமைப்பாளர் - பி.கே.மதுசூதன், சி20, அரசு ஊழியர் குடியிருப்பு, பேருந்துநிலையம் எதிரில், திண்டுக்கல்.

துணை அமைப்பாளர்கள் - 1) ச.சஞ்சிவ்குமார், 25-306 9வது தெரு மேட்டுப்பட்டி, திண்டுக்கல். 2) உ.ரஹ்மான், 64-65 பேட்டை ரோடு, பேகம்பூர் அஞ்சல், திண்டுக்கல். 3) சு.அசோக், 28-81ஏ பாரதிபுரம், நாகல்நகர் 1வது தெரு, திண்டுக்கல். 4) ஏ.ஆர்.கிஷோர், 1-4, முத்து நகர், ஆர்.எம். காலனி, 4வது கிராஸ், திண்டுக்கல். 5) ஓ.வீரமணி, எம்.எல்-2, ஆர்.எம்.காலனி, 3வது குறுக்குத் தெரு, திண்டுக்கல். 6) ரா.புஷ்பலதா, 48-பி கோபால் நகர், ஒய்.எம்.ஆர்.பட்டி, திண்டுக்கல். 7) ர.கிஷோர்குமார், 37 மெங்கில்ஸ் ரோடு, நாகல் நகர், திண்டுக்கல். 8) பா.விவேக் ஜான்சன், வைத்தியலிங்கம் நகர் 2வது தெரு, மொட்டணம்பட்டி ரோடு, மேட்டுப்பட்டி திண்டுக்கல்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 21-05-2025.

**இரா. ராஜீவ்காந்தி,**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி, திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றியம், கீரிமேடு ஊராட்சியைச் சேர்ந்த அதிமுக மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற இளைஞர் அணி துணை செயலாளர் வேணு என்பவர் அக்கட்சியில் இருந்து விலகி திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான நல்லாட்சியை ஏற்று, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் முன்னிலையில் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார், அப்போது வேணுவின் மகன் மற்றும் திருநாவலூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர், மாவட்ட கவுன்சிலர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜி.ஆர்.வசந்தவேல், திருவெண்ணை நல்லூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர், மாவட்ட கவுன்சிலர் மா.சந்திரசேகரன் ஆகியோர் உடன் இருந்தனர்.



கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ காணை தெற்கு ஒன்றியம் மாம்பழப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த மறைந்த பேராசிரியர் R.நடராஜன் அவர்களின் உடலுக்கு மாலை அணிவித்து அவரது பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன் நகர செயலாளர் இரா. சக்கரை ஒன்றிய கழக செயலாளர்கள் ஜெ.ஜெயபால்,PVR.விசுவநாதன்,ஒன்றியக்குழு தலைவர் ஓம் சிவ சக்திவேல் மாநில பொதுக்குழு உறுப்பினர் காடுவெட்டி ஏழுமலை,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராஜசேகர்,கிளை கழக செயலாளர்கள் ஏழுமலை,செந்தில், புஷ்பராஜ்,கழக நிர்வாகிகள் ரவி,குமார்,ராஜா,ராமமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.